## தலைப்பு 123 – வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட முடியாது. அத்துடன் இக்காரணத்தினால் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் இவ்வறிக்கையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவு விடய இலக்கம் 02-03-02-1503 கட்டுமானக் கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக மேலதிக மதிப்பீடு இல 5531 இன் கீழ் பெறப்பட்ட ரூபா 28,460,000 தொகையானது நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் பெறப்பட்ட ஒதுக்கமாகக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | மேலதிக மற்றும் நி.பி 66 என்பன பிழையின்றி கணக்குகளில் காட்டப்பட வேண்டும். | செலவு விடய இலக்கம் 02-03-02-1503 கட்டுமானக் கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக மேலதிக மதிப்பீடாகக் பெறப்பட்ட ரூபா 28,460,000 ஆன தொகை தவறுதலாக நி.பி 66 இன் கீழ் பெறப்பட்டதாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. |
| (ஆ) | வேறு பெறுவனவுகளாகிய ரூபா 25,544,280 கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய விபரங்கள் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்குகளுடன் வேண்டிய விபரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | ரூபா 25,544,280 தொகைக்கான விபரங்களை விரைவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.2 நிதிநிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது கணக்குகளின் பிரகாரம் நிதி சாரா சொத்துக்களின் பெறுமதி ரூபா 276,442,440 ஆக இருந்ததுடன் சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 9,685,160 ஆக இருந்தது. | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) இன் இரண்டாம் பிற்சேர்க்கையின் பிரகாரம் நிறுவனத்திற்குரிய சொத்துக்களுக்கான சகல விபரங்களும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் தொடர்பாக பதிவேட்டிலும் மற்றும் நிதிக் கூற்றுக்களிலும் காட்டப்பட வேண்டும். | பிழையற்ற மீதிகளை இனங்கண்ட பின்னர் காட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஆ) 2017 யூன் 28 ஆந் திகதிய நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் MF/CG/02/(Cir) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களினதும் அனைத்து சொத்துக்கள் தொடர்பான பிழையற்ற தகவல்கள் கொம்ப்ரோலர் ஜெனராலிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், அமைச்சினால் கொம்ப்ரோலர் ஜெனராலிற்கு சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 257,511,861 ஆனதுடன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறுமதி ரூபா 276,442,420 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 18,930,559 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் MF/CG/02/(Cir) ஆம் இலக்க 2017 யூன் 28 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் சகல சொத்துக்கள் சம்பந்தமாக பிழையற்ற தகவல்கள் கொம்ப்ரோலர் ஜெனராலுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பிழையற்ற மீதிகளை இனங்கண்ட பின்னர் அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.3 முற்பணக் கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதி தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் பிரகாரம் வேலையில் இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தரின் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட கடன் நிலுவைகளின் மொத்தம் ரூபா 199,460 ஆக இருந்தது. | விரைவில் கடன் தொகைகளை அறவிடுவதற்கானத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிட்ட உத்தியோகத்தர் இறந்து விட்டதுடன் அவருடைய பணிக்கொடைக் கொடுப்பனவிலிருந்து செலுத்தும் படியாக ஓய்வூதியத் திணைக்களத்திடம் கோரப்பட்டிருப்பதுடன் அப்படிகளைப் பெற்று விரைவில் குறிப்பிட்ட கடன் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.4 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்படாமையுடன் காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் முறையாக மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட வகையில் பேணப்படாமை மாதிரி கணக்காய்வுச் சோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் பதிவேடு | | |
| 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் பிற்சேர்க்கை II இற்கு அமைவாக நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரமாணங்களின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பிழையின்றி தயாரிக்கப்பட வேண்டும். | நடைமுறையல்லாச் சொத்துக்களின் பதிவேடு விரைவில் நாளதுவரையாக்கப் படுவதற்குக் குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் பிரமாணங்களின் பிரகாரம் இழப்புக்கள் தொடர்பாக பதிவேடு | இந்தப் பதிவேட்டை விரைவில் தொடங்குவது சம்பந்தமாக நிதிப் பிரிவின் உத்தியோகத்தருக்குக் கூறப்பட்டதுடன் அது கணக்காய்வுக்குச் |

| | | | |
|---|---|---|---|
| | | பேணப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படும். எனினும், அமைச்சின் வாகனங்கள் சம்பந்தமாக இழப்புக்கள் பதிவேடு ஒன்று தற்போது நிர்வாகப் பிரிவில் பேணப்பட்டு வருகின்றது. |

### 1.6.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிகளுக்கான கணக்காய்வு ஆராய்வுகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டதிட்ட மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவு | அமைச்சின் நிதி நிர்வாகம் சம்பந்தமாகப் பயனுள்ள உள்ளக நிர்வாக முறைமைகள் தயாரிக்கப்பட்டு பேணப்பட வேண்டுமென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துவதுடன் காலத்திற்குக் காலம் அம்முறைமையின் பயன்பாட்டை மேற்பார்வை செய்து அதன் பிரகாரம் அம்முறைமைகளைப் பயனுள்ளதாகச் செயற்படத்தக்க வகையில் தேவையான மாற்றங்களைச் செய்தல் வேண்டும். அவ்வாறான மீளாய்வுகள் எழுத்து மூலமாகத் தயாரிக்கப்பட்டு அதன் ஒரு பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அம்மீளாய்வுகளைச் செய்தமைக்கான கூற்றுக்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 இலிருந்து குறிப்பிட்ட அறிக்கை கணக்காய்வு தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 94 | நிதிப்பிரமாணம் 94 இன் பிரகாரம் பொறுப்புக்கள் எச் சந்தர்ப்பத்திலும் ஒதுக்கப்பட்ட தொகையை விடத் தாண்டக் கூடாதாயினும் 08 செலவு விடயங்களுடன் சம்பந்தமான ரூபா 314,125 ஆன பொறுப்புக்கள் ஒதுக்கப்பட்ட தொகையைத் | நிதிப்பிரமாணம் 94 இல் குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிடப்பட்ட ரூபா 314,125 தொகையில் ரூபா 250,255 ஆனது உத்தியோகத்தர்களின் மேலதிக நேர மற்றும் எரிபொருள் சம்பந்தமான செலவுகளாகும். மிகுதிக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தாண்டியவையாக இருந்தன. | | கடன்பாடுகளும் அவசியத் தேவைகளுக்காகவே செய்யப்பட்டதாகக் கருதப்படுகின்றது. |
| (இ) | 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டி இல. 5.4.12 | பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவு தொடர்பான விபரங்கள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கணக்காய்வுத் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | VAT கொடுப்பனவு சம்பந்தமான விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பிரதியுடன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர் களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாக குறித்துக் கொள்ளப்பட்டது. |
| (ஈ) | 2016 சனவரி 01 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 06(i) மற்றும் 07 ஆம் பிரிவுகள் | காலாண்டின் இறுதியில் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் காலாண்டின்போது புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட வாகனங்கள், வாகனங்களை விற்றுத் தீர்த்தல்கள் மற்றும் மாற்றங்கள் தொடர்பான தகவல்கள் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2016 சனவரி 01 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 06(i), (ii) மற்றும் 07 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது | செலவினங்களை | மூலதனச் செலவு |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 11,389,000,000 ஆன நிகர ஏற்பாட்டில் ரூபா 9,643,761,105 ஆனது மீளாய்வாண்டினுள் பயன்படுத்தப்பட்டமை ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டில் நூற்றுக்கு 85 வீதமாகும். | சரியான இனங்கண்டு தேவைக்கேற்ப ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்ளல் வேண்டும். | விடயங்களின் சேமிப்புக்களுக்கான பிரதான காரணம் கடந்த வருட இறுதியில் நாட்டிலேற்பட்ட நிலைமை தாக்கமளித்திருப்பதாகக் கருதப்படுகின்றது. |
| (ஆ) | எதிர்வரும் வருடத்திற்கான மதிப்பீடு தயாரிக்கும் போது செலவினங்களைச் சரியான இனங்காணப்படாமை காரணமாக 18 செலவு விடயங்களுக்கான தேவை க்கு அதிகமாக நூற்றுக்கு 10 தொடக்கம் நூற்றுக்கு 100 வீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. | செலவினங்களை சரியாக இனங்கண்டு தேவைக்கேற்ப ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்ளல் வேண்டும். | 2018 இன் ஆண்டிறுதியின் போது நாட்டிலேற்பட்ட நிலைமையே இச் சேமிப்பிற்கான காரணமாகும். |
| (இ) | செலவு விடயம் 01-01-1408 செயற்பாட்டுக் குத்தகையின் அடிப்படையில் வாகனமொன்றைக் கொள்வனவு செய்திலின் போது தவணைக் கட்டணங்களுக்காக ரூபா 5,940,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவ்வாறான செய்யப்படவில்லை. இவ்வொதுக்கம் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் வேறு செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | சொத்துக் கொள்வனவுக்கான தேவையை அறிந்தே ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்ளல் வேண்டும். | ரூபா 5,940,000 ஆன ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அமைச்சினால் பின்னர் வாகன்க கொள்வனவு நிறுத்தப்பட்டது. |
| (ஈ) | ஆரம்பச் செலவின மதிப்பீடு மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கிடையே நூற்றுக்கு 10 தொடக்கம் நூற்றுக்கு 123 வீதம் வரையான வீச்சில் வேறுபாடகள் அவதானிக்கப்பட்டதுடன் அவ்வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்கின் ஏசீஏ-2(iii) இல் காட்டப்பட்டிருக்கவில்லை | நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-2(iii) இன் பிரகாரம் ஆரம்ப செலவின மதிப்பீடு மற்றும் உள்ளபடியான செலவினங்களுக் கிடையிலான வேறுபாடுகளுக்கு காரணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சேமிப்புக்கள் தொடர்பாக இரு வாரங்களுக்குள் காரணங்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்போம். (சமர்ப்பிக்கப்படவில்லை.) |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க பொது நிதிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் வருடத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், அத்திட்டம் வருடத்தினுள் இரு சந்தர்ப்பங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்ததுடன் வருட முடிவின் பின் இரு மாதங்களுக்குப் பிறகும் அதாவது 2019 மார்ச் 12 ஆந் திகதியில் வருடத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தை மாற்றம் செய்வதற்கான தேவையேற்படின் அவ் வருடத்தினுள் மாற்றம் செய்வதற்கு குறிப்பிட்ட அனுமதியின் பிரகாரம் செய்ய வேண்டியதுடன் வருடம் முடிவடைந்த பின்னர் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் மாற்றங்கள் செய்தல் ஆகாது. | குறைந்தளவு வருமான மீட்டும் மக்களுக்கு உரித்துடைய வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டமையுடன் காலத்துக்குக் காலம் மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018 ஆம் வருட அரை இறுதியில் உண்டான மாற்றங்கள் சம்பந்தமாக செயல் நடவடிக்கைத் திட்டம் மாற்றப்பட்டிருந்தது. |

### 3.2 செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலான தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாதிரிக் கிராம நிகழ்ச்சித்திட்டம் (புதிய) | | |
| இது தொடர்பாக 2018 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 937 மில்லியன் என்பதுடன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செலவிடப்பட்ட செலவுகள் ரூபா 581 மில்லியன் ஆகும். இதன் பிரகாரம் நிதிசார்ந்த முன்னேற்றம் நூற்றுக்கு 62 வீதமாகும். வருடத்தில் எதிர்பார்க்கப்பட்ட கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 20,375 என்பதுடன் மீளாய்வாண்டின் இறுதியின் போது பூரணமாக மற்றும் | குறிப்பிட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை பூரணப் படுத்துவதற்கு வேண்டிய விதத்தில் திட்டம தயாரிக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை |

கூரை வரையில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 1,555 ஆனதுடன் 2018 திசெம்பர் 31 திகதியில் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 8 வீதம் மட்டுமே ஆகும்.

| | | |
|---|---|---|
| (ஆ) பரவலான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (புதிய)<br>---------------------------------------------------------------<br>இது தொடர்பான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 709 மில்லியன் ஆக இருந்ததுடன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியிலான முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செலவிடப்பட்ட செலவுகள் ரூபா 637 மில்லியன் ஆனதுடன் செயற்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 90 வீதம் என்பதுடன் எதிர்பார்க்கப்பட்ட கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 7,000 ஆயினும், கூரைப் பகுதி வரையில் மற்றும் முழுமையாக பூரணமாக்கப்பட்ட வீடுகள் 4,879 ஆகும். இதன் பிரகாரம் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 70 வீதம் ஆகும். | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) வடமாகாண வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (புதிய)<br>---------------------------------------------------------------<br>இது தொடர்பான 2018 வருடத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 2,401 மில்லியன் ஆக இருந்ததுடன் ரூபா 1,844 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியிலான செயற்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 77 வீதமானது. எதிர்பார்க்கப்பட்ட வீடுகள் 5000 இல் மேற்கூரைப் பகுதி வரையில் மற்றும் முழுமையாக பூரணமாக்கப்பட்ட வீடுகள் 4,511 ஆனதுடன் எதிர்பார்க்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையில் நூற்றுக்கு 90 வீதம் மட்டுமே கட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) போகஸ்வேவ விசேட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (தொடர்ந்து) | | |

| | | | |
|---|---|---|---|
| | ---------------------------------------------------------------- மேற்குறிப்பிடப்பட்ட செயற்திட்டம் தொடர்பாக மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 449 மில்லியன் என்பதுடன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் செலவிடப்பட்ட செலவு ரூபா 200 மில்லியன் ஆனதுடன் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 45 வீதமும் எதிர்பார்க்கப்பட்ட வீடுகள் 1,566 இல் கூரைப்பகுதி வரையில் மற்றும் முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட வீடுகள் 978 என்பதுடன் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 62 வீதமாகும். | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | விருசுமித்துரு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (புதிய) | | |
| | ---------------------------------------------------------------- றணவிரு அதிகாரசபை மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட திட்டமிடப்பட்ட செயற்திட்டத்திற்கு 2018 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்ட தொகையானது ரூபா 116 மில்லியன் ஆகும். செலவிடப்பட்ட செலவு ரூபா 113 மில்லியன் என்பதுடன் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 97 வீதமாகும். எனினும், வருடத்தில் எதிர்பார்க்கப்பட்ட வீடுகள 550 என்பதுடன் கூரைப் பகுதி வரையில் மற்றும் முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்ட வீடுகள் 405 ஆனதுடன் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 74 வீதம் மட்டுமே ஆகும். | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | கிராம சக்தி உதாகம்பான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (புதிய) | | |
| | ---------------------------------------------------------------- இது தொடர்பாக வருடத்திற்கு மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 100 மில்லியன் என்பதுடன் மேலதிக ஏற்பாடு அடங்கலாக 2018 வருடத்தின் போது செலவிடப்பட்ட செலவு ரூபா 234 மில்லியன் ஆகும். இதன் பிரகாரம் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 234 வீதமாகும். எனினும் வருடத்தினுள் எதிர்பார்க்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 1200 என்பதுடன் கூரைப்பகுதி வரையில் மற்றும் முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 255 என்பதுடன் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 21 | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| வீதம் மட்டுமே ஆகும். | | |
| (எ) மாதிரிக் கிராம நிகழ்ச்சித்திட்டம் (தொடர்ந்து)<br>--------------------------------------------------------------<br>மேற்படி செயற்திட்டம் தொடர்பாக 2018 வருடத்தில் மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 632 மில்லியன் என்பதுடன் செலவிடப்பட்ட செலவு ரூபா 486 மில்லியன் ஆகும். இதன் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 76 வீதமாகும். எதிர்பார்க்கப்பட்ட வீடுகள் 4,960 இல் பூரணப்படுத்தப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 3,909 மட்டுமே ஆகும். கூரை முழுமையாக்கப்பட்ட வீடுகள் 1,743 என்பதுடன் கூரை வரையில் கட்டப்பட்ட வீடுகள் 664 ஆவதுடன் இந்நிகழ்ச்சித்திட்டம் 2018 செப்டம்பர் 30 ஆந் திகதி முடிக்கப்பட வேண்டுமாயினும், தாமதமான காலம் 3 மாதங்கள் ஆகும். | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) கிராம சக்தி மாதிரிக்கிராமம் (தொடர்ந்து)<br>--------------------------------------------------------------<br>இது தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 543 மில்லியன் ஆனதுடன் செலவிடப்பட்ட செலவு ரூபா 316 மில்லியன் எனினும், நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 58 வீதமாகும். எதிர்பார்க்கப்பட்ட வீடுகள் 1,301 இல் பூரணப்படுத்தப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 844 ஆகும். இதன் பிரகாரம் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 65 வீதமாகும். செயற்திட்டம் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதியில் முடிவுற வேண்டிய போதிலும் தாமத காலம் 3 மாதங்களாகும். | - மேற்படி - | - மேற்படி - |

**3.3 முகாமைத்துவ நலிவுகள்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) நிலையான தொழில்நுட்பக் குழு (Standard Technical Committee) வின் அங்கீகாரம் பெறுதல் | | |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) | 2014 மே 20 ஆந் திகதி தொடக்கம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அரச நிறுவனங்களின் நிர்மாணங்கள் தொடர்பான நிலையான தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரம் பெறுவதற்கு அனுப்பப்பட்ட 71 ஒப்பந்தக் கோவைகள் 2018 ஆம் வருட இறுதியின் போது மதிப்பீடு செய்யப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான தொழில்நுட்பக் குழு அங்கீகாரம் வழங்குவதில் காலதாதமமின்றி செயற்படல் வேண்டும். | குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தக் கோவைகள் சம்பந்தமாக விபரங்கள் கொடுக்கப்படாமை, மதிப்பீட்டு அலுவல்கள் நூற்றுக்கு 95 வீதம் பூரணப்படுத்தப்பட்ட உருப்படிகளின் தகவல்கள் கிடைக்காமை, வேலை விடயங்கள் வேறுபடுதல், ஒப்பந்தம் முடிவுறாது மற்றும் அடிப்படை வருடம் மாறுபடுதல் போன்ற காரணங்களினால் மதிப்பீடு பூர்த்தி செய்யப்படவில்லை. |
| (ii) | 2015 திசெம்பர் 23 ஆந் திகதியிலிருந்து 2018 ஒக்டோபர் 18 ஆந் திகதி வரையில் நிலையான தொழில்நுட்பக் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பாக 6 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் எடுக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | நிலையான தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அங்கீகாரம் வழங்குவதில் காலதாமதமின்றிச் செயற்படல் வேண்டும். | அங்கீகாரம் வழங்குவதற்கு தேவையான அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் பத்திரம் பெறப்படாமை, குறிப்பிடப்பட்ட நிறுவனத்தின் தேவையான விபரங்கள் பெறப்படாமை, வேலை விடயங்கள் முடிவுறாமைக்கான காரணங்களானதுடன் மதிப்பீடு பூர்த்தி செய்ய முடியாது போயிற்று. |
| (iii) | நிலையான தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரம் சம்பந்தமாக ஒப்பந்த நிறுவனங்களினால் அனுப்பப்பட்டிருந்த ஒழுங்கிற்குப் புறம்பாக ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு ஒரு மாதமாயினும், அங்கீகாரம் வழங்கப்பட வேண்டுமாயினும், மேலும் சில ஒப்பந்தப் பெறுமதிகள் சம்பந்தமாக அங்கீகாரம் வழங்குவதற்கு 1 வருடம் தொடக்கம் 6 வருடங்கள் வரையான காலதாமதம் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கீகாரம் வழங்கும் போது நிறுவனங்களால் அனுப்பப்பட்ட ஒழுங்கினைக் கவனத்திற் கொள்ள வேண்டும். | சில நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் பதில்கள் தாமதமாவதால் பெறப்பட்ட ஒழுங்கின்படி அங்கீகாரம் வழங்க முடியாதுள்ளது. குழுவினால் பரீட்சிக்கப்பட்டு குறைபாடு அறிவிக்கப்படும் போது கிடைக்கும் பதில்கள் தாமதமடைதல், ஒரே நிறுவன்தின் பல தரப்பட்ட ஒப்பந்தங்களின் பதில்களுக்கான தாமதம், ஒரே வகையான நிகழ்ச்சித் திட்டங்களை ஒரே நேரத்தில் மதிப்பீடு செய்வது இலகுவாக இருந்தமை போன்ற காரணங்களினால் அம்மதிப்பீடுகள் மதிப்பாய்வு செய்தல் தொடர்பான தாமதங்கள் ஏற்பட்டது. |
| (iv) | பொதுமக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குவதின் நோக்கத்தில் | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் | மொத்தக் கூறு விலைகள் அமுல்படுத்தல், சந்தை விலைகளை மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பாக அமைச்சரவையின் அனுமதிக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் நிர்மாணம் குறிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் முடியாமை மற்றும் பொது மக்களின் தேவைக்கான நிர்மாணம் தொடர்பாக உபயோகிக்க முடியாமை என்பன நிலையான தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரத்திற்கான காலதாமதம் காரணமாக என்பதுடன் நிர்மாணம் தொடர்பாக கூடுதலான முதலீடுகளை ஈடுபடுத்தலில் உள்ள சந்தேகம் என்பன கணக்காய்வின் போது வரையறுத்தக் கூறமுடியாதுள்ளது. | அறிக்கையை விரைவில் பெறுவதற்கான வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அனுமதிக்கப்பட்ட விலைகளைப் பகுப்பாய்வு செய்தல் என்பவற்றினாலேயே ஒப்பந்த நிறுவனங்களின் ஒப்பந்த அளவுகள் தயாரிக்கப்படுகின்றன. அனுமதிக்கப்பட்ட விலைமனுக்களை மேலதிக மனுக்கள் ஒப்பந்த விலையைக் குறைப்பதுடன் மூல மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட கிரய மதிப்பீட்டை அடையத் தவறுவதுடன் ஒப்பந்த விலையில் குறைவை ஏற்படுத்துகின்றது. ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பல வருடங்களின் பின்னர் குழுவின் அங்கீகாரம் கோரப்படுவதால் மற்றும் ஒப்பந்தக்காரர் கூடிய விலையை கொடுப்பதற்கு நிலையான தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று விலைகளில் குறிப்பிட்ட விகிதமாக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்துவதற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனம் பொறுப்பாகும். |
| (ஆ) | மாதிரிக் கிராம எழுச்சி மற்றும் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக காணிகள் கையேற்றல்<br>------------------------------------------- | | |
| (i) | தேசிய வீடமைப்பு அபிவிருந்தி அதிகாரசபையின் தலைவரினால் அமைச்சின் செயலாளரிற்கு விலாசமிடப்பட்ட 2018 மே 01 ஆந் திகதிய 8/4/1/1/76/3 ஆம் இலக்க கடிதம் மற்றும் வீடமைப்பு கலாச்சார அலுவல்கள் அமைச்சின் வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி மேலதிகச் செயலாளரினால் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு விலாசமிடப்பட்ட 2018 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 3/1/2/33 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், வீடமைப்புத் திட்டம் | வீடு கட்டுவதற்கு முன் காணி சுவீகரித்தல் / கையேற்றல் இடம்பெறல் வேண்டும். | 2018 வருட இறுதியின் போது புதிய மற்றும் பழைய வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக க அரசிற்குச் சொந்தமான 260 காணிகள் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கையேற்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டது. தற்போதைய நிலவரத்தின் படி புதிய செயற்திட்ட நிர்மாணங்களுடன் அக்காணிகளின் எண்ணிக்கை 304 வரையில் அதிகரித்துள்ளதாக குறித்துக் கொள்ளப்பட்டது. 2018 ஆண்டிறுதியின் போது சுவீகரிக்கும் அலுவல்கள் 64 காணிகளுக்காக நடைபெற்றது. அக்காணிகளின் எண்ணிக்கையில் காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் 17 ஆம் |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிக்கும் போது 304 அரசிற்குச் சொந்தமான காணிகள் மற்றும் 64 தனிப்பட்ட காணிகள் மட்டுமான எண்ணிக்கை 2018 வருட இறுதியின்போது கையேற்கப்பட்டிருக்க வில்லை. | | பிரிவின் கீழ் பிரதேச செயலாளரினால் நட்டஈடு வழங்கப்பட வேண்டிய காணிகளாக குறைந்த மட்டத்திலான காணிகளில் உள்ளடக்கப்பட்டன. இவ்வனைத்து தனிப்பட்ட காணிகள் பழைய வீட்டுத் திட்டங்களாகும். |
| (ii) | 2018 ஆம் வருடம் சுவீகரிக்கப்பட்ட 14 காணிகள் தொடர்பாக பிரதேச செயலாளரினால் கோரப்பட்ட தொகை ரூபா 27,744,486 ஆனதுடன் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட ரூபா 10 மில்லியன் ஏற்பாட்டுத் தொகையில் 2 காணிகள் மற்றும் இன்னுமொரு காணியின் பகுதி சம்பந்தமாக மட்டும் நட்ட ஈட்டுத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. ரூபா 17,744,486 இன் மிகுதிப் பணம் செலுத்தப்படாமல் அது சம்பந்தமாக செலுத்த வேண்டிய வட்டி காலத்திற்குக் காலம் கூட்டப்பட்டுக் காணப்பட்டது. | நட்ட வீடு வழங்குவதற்கான காணிகள் தொடர்பாக நட்ட வீட்டுக் கொடுப்பனவை குறிப்பிட்டவாறு செயற்படுத்தல் வேண்டும். | 2018 வருட ஆரம்பத்தின் போது 14 காணிகள் சம்பந்தமாக நட்ட வீடு மற்றும் நட்ட வீட்டு வட்டிக் கொடுப்பனவு சம்பந்தமாக ரூபா 27,744,486 தொகையானது தேவைப்பட்டது. திறைசேரியிடமிருந்து மேற்படி தொகையை பெறுவதற்கான கோரிக்கைக்கு ரூபா 10 மில்லியன் வழங்கப்பட்டதுடன் காணிகள் இரண்டிற்கு நட்ட வீட்டுத் தொகை மற்றம் இடமொன்றுக்கு நட்ட வீட்டின் பகுதி ஒன்றும் பெறப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து கொடுக்கப்பட்டது. ஆயினும், நட்ட ஈட்டுக் கொடுப்பனவு தாமதமாகும் போது சட்டத்தின் பிரமாணங்களின் பிரகாரம் கொடுக்க வேண்டியவ வட்டி அதிகரிக்கும். |
| (iii) | தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளரிடமிருந்து செயலாளர், வீடமைப்பு மற்றும் கலாச்சார அலுவல்களுக்கு அனுப்பப்பட்ட 2017 திசெம்பர் 29 ஆந் திகதிய BD/RDS/123/1/9/4 கடிதத்தின் படி எதிர்வரும் காலங்களில் வீடமைப்புச் செயற்திட்டம் ஆரம்பிக்கும் போது அது தொடர்பாக தேவையான காணிகள் கையேற்கும் விடயங்கள் விரைவில் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தற்போது காணிகள் | வீடமைப்புச் செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் காணிகளை கையேற்பது அல்லது பொறுப்பேற்பது வேண்டும். | சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம் 38 காணிகளின் விபரங்களின் பிரகாரம் அக்காணிகளில் 26 ஆனது பொறுப்பேற்பது சம்பந்தமாக குறித்த மாவட்ட முகாமையாளரினால் சொத்து முகாமைத்துவம் பிரிவாக அங்கீகரிக்கப்பட்டதுடன் விலக்களிக்கப்பட்ட படிகள் ஆவணத்தினால் அக்காணியைக் கைப்பற்றுவது சம்பந்தமாக காணி கைப்பற்றும் பிரிவினால் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய காணிகள் சம்பந்தமாக தகவல் தலைமைக் காரியாலயத்திடம் கொடுக்கப்பட்டதும் கைப்பற்றும் நடவடிக்கைகள் நிர்மாணங்கள் நடைபெறும் காலப்பகுதியினுள் எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கையேற்கப்படாமல் வீடமைப்புச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டது. | | |
| (iv) | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கம்பஹா மாவட்ட காரியாலயம் செயற்படுத்தப்படுகின்ற காணியின் உரிமை கம்பஹா மாவட்டம் பிரதேச செயலாளரினால் 1999 செப்டம்பர் 30 இல் பாரமெடுக்கப்பட்டதாயினும் காணியின் சட்டரீதியான உரிமையைப் பெறாது அதிகாரசபையின் அலுவலகக் கட்டிடம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் கட்டப்பட்டு பராமரிக்கப்படுகின்றது. கம்பஹா பிரதேச செயலாளரினால் மேற்கூறிய கட்டிடத்திற்கான வாடகையான 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 2,280,000 கொடுப்பனவு செய்வதாக 2016 செப்டம்பர் 29 ஆந் திகதிய கம்/பிசெ/2/2/2/39(4) ஆம் இலக்க கடிதத்தின் அறிவிக்கப்பட்டுள்ளது. | காணிகளைக் கைப்பற்றாது கட்டிடங்களைக் கட்டும் போது வாடகை செலுத்த வேண்டியுள்ள மையால் காணிகளைக் கைப்பற்றி கட்டிடங்கள் கட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல். | 52.4 பேர்ச்சஸ் கொண்ட மாநகர சபைப் பகுதியில் அமைந்துள்ள இக்காணி வீடமைப்புத் தேவைப்பாட்டிற்காக அலுவலகச் சூழலுடன் கட்டிட தொடர்மாடி வீடமைப்பிற்கு உகந்ததாக அவதானிக்கப்பட்டது. அவ்வகையான வீடமைப்புத் திட்டத்தை செயற்படுத்துவதற்காக காணியின் உரிமை அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் படிகள் பத்திரத்தின் மூலம் காணியின் உரிமையை பெறுவதற்கு மீண்டும் பிரதேச செயலாளருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |
| (v) | நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டங்கள் சம்பந்தமாக நீர் பற்றாக்குறை காரணத்தினால் வீடுகளில் வகிப்போரில் பிரச்சினைகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மொனராகலை மாவட்டத்தில் தனமல்வில பிரதேசச் செயலாளர் பிரிவின் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பொரளுவல்லயாய மாதிரிக் கிராமத்தில் 36 வீடுகள் குடி நீர் வசதிகள் இன்றி 2018 வருடத்தில் | வீடமைப்புத் திட்டம் சம்பந்தமாக சாத்திய வளக் கற்கை ஆய்வுகளை மேற்கொண்டு பரிந்துரைகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | 2016 ஆம் ஆண்டில் 36 வீடுகள் தனமல்வில பிரதேசச் செயலகம் பிரிவில் பொரளுவல்லயாய கிராமத்தில் ஏற்பட்ட குடிநீர்ப் பிரச்சினை காரணமாக அமைச்சரினால் குறுகிய காலத் தீர்வாக நீர்த்தாங்கிகளை வழங்கி பவுசர்களின் மூலம் வாரத்திற்கு இரு தடவைகள் நீர் நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | மக்களுக்கு கையளிப்பதில் பிரச்சினைகள் காணப்பட்டது. | | |
| (vi) | இரத்தினபுரி கல்கடுவத்தக் காணி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் கையேற்றமை தொடர்பாக ரூபா 8,686,000 கொடுப்பனவிற்கான 2000 மே 06 ஆந் திகதிய நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இத்தொகை 2012 மார்ச் 20 இல் கொடுக்கப்பட்டதுடன் காலதாமதம் காரணமாகக் காணி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையேற்பதற்கு ரூபா 145,530,000 புதிய மதிப்பீட்டுப் பெறமதி கொடுக்கப்பட்டதாக மீண்டும் நகர அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்திருந்தது. | பேச்சு வார்த்தை நடாத்தி தற்போதுள்ள நிலைமையைத் திருத்திக் கொள்ள வேண்டும். | கல்கடுவத்தக் காணியை கையேற்பது தொடர்பாக ரூபா 8,686,000 ஆன தொகை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கொடுக்கப்பட்டதுடன் புதிய மதிப்பீட்டுப் பெறுமதியின் கீழ் இக்காணி கையேற்கப்படவில்லையென முகாமைத்துவத்தினால் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதனால் செலுத்தப்பட்ட பணத்தை மீண்டும் பெறுவதற்காக அந்நிறுவனத்திடம் கோரிக்கை விடுவிக்கப்பட்டது. அக்கோரிக்கையின் பிரகாரம் உள்ளடக்கப்படாத காணிப் பகுதியின் மதிப்பீடு குறைக்கப்பட்டு எஞ்சிய பணம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு மீண்டும் வழங்கப்படுவதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது. |
| (இ) | வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவை பத்திரம் இலக்கம் 25/2018- 2018 யூன் 11 மற்றும் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் PED/INF/123/000/CM/389 மற்றம் 2018 யூன் 22 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி செய்யும் போது விசேட செயற்பாடுகள் செயற்படுத்துவது சம்பந்தமாக அரசின் கைத்தொழிற்சாலைகளை மீள் ஒழுங்கமைப்பு செய்யும் பொருட்டு நியமிக்கப்பட்ட அனுபவம் மிக்க குழுவினரின் அறிக்கை 2019 ஏப்ரல் | அனுபவம் மிக்க குழுவினரின் அறிக்கை பெறப் படுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து அவ் வறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்தல் வேண்டும். | அவ்வமைச்சரவை பத்திரத்திற்கு இணங்க அனுபவம் மிக்க குழுவினரின் அறிக்கை இன்று பூரணப்படுத்தப்படவில்லை என்பதுடன் அவ்வறிக்கைத் தயாரிக்கப்பட்டவுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுமென்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |

மாத இறுதி வரையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 4. நல்லாட்சி

### 4.1 பொதுமக்களுக்கான சேவைகள நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தினால் வீடமைப்பு நிர்மாணம் மற்றும் கலாச்சார அமைச்சின் செயலாளருக்கு விலாசமிடப்பட்ட 2017.12.29 ஆந் திகதிய BD/RDS123/1/9/4 ஆம் இலக்கமுடைய கடிதத்தின் பிரகாரம் நட்ட ஈட்டுத் தொகை கோரப்பட்டதுடன் காணி இன்னும் 20 வருடத்திற்கு முன் சுவீகரிக்கப்பட்டு வீடமைப்புத் திட்டம் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக அவதானிக்கப்பட்டது. குறிப்பிடப்ட் காணி உரிமையாளருக்கு நட்ட ஈட்டுத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணிச் சுவீகரித்தல் மற்றும் அதற்கான நட்டஈடு செலுத்தப்படல் வேண்டும். | தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் பழைய வீடமைப்புத் திட்டம் நிர்மாணிக்கும் போது தனிப்பட்டோரின் காணிகள் அதிகளவில் பெறப்பட்டதுடன் அவற்றின் பெரும்பாலானவை சுவீகரிக்கப்பட்ட பின்னர் இன்றை வரையில் எஞ்சியவை 64 காணிகளாகும். இக்காணிகளின் சுவீகரிப்பு நடவடிக்கைகள் விரைவில் முடிப்பதற்கு அந்தந்த பிரதேசச் செயலாளர்களுக்கு கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. சட்டரீதியான நடவடிக்கைகளின் செயற்பாடு காரணமாகத் தாமதம் அடைந்துள்ளது. |
| (ஆ) | தனிப்பட்ட மற்றும் அரசுக்குரிய காணிகள் கையேற்கப்படாது வீடுகள் அமைக்கப்பட்டு வீடுகளில் வகிப்பதற்கும் வழங்கப்பட்டிருந்த போதிலும், மக்களுக்கு முறையான உறுதிகள் வழங்கப்படாமை காரணமாக வீடுகளுக்கான உரிமைகளைப் பெறாமல் அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருந்தது. பெரும்பாலான வழங்கப்பட்ட காணிகளில் வசிப்போர் வீடுகளைக் கட்டுவதற்காக அரசிடமிருந்து கடன்களைப் பெற்று அவர்களது தனிப்பட்ட பணத்தின் மூலமாகவே என கணக்காய்வின் போது | வசிப்போருக்கான உறுதிகளை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முதலில் வீடுகளின் அல்லது காணிகளின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதுடன் இக்காணிகளின் உரிமைகளை முறையாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு பின்னர் மாற்றப்படும். |

அவதானிக்கப்பட்டது.

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் பதவிகளுக்கான வெற்றிடங்கள் 34 ஆவதுடன் மீளாய்வாண்டின் போது அமைச்சின் பொறுப்பில் உள்ள நிறுவனங்களின் சம்பளம் செலுத்தப்படும் 17 அலுவலகர்கள் 2007 திசெம்பரிலிருந்து 2018 திசெம்பர் வரையான காலப்பகுதியினுள் காலத்திற்கு காலம் அமைச்சின் கடமைப் பொறுப்புக்கள் சம்பந்தமாக வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். அமைச்சின் வெற்றிடம் தோன்றும் போது அமைச்சினால் சம்பளம் செலுத்தப்படும் அலுவலகர்கள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கடமைகள் தொடர்பாக விலக்களிக்கப்பட்டிருந்தார். | அமைச்சினால் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுத்தல் அல்லது அப்பதவி தேவையற்றதாயின் அவற்றை நீக்கப்படல் வேண்டும். | இவ்வமைச்சிற்குரிய நிறுவனங்களின் சம்பளம் செலுத்தப்படும் 17 அலுவலகர்களுக்கு அமைச்சின் மூலம் வேலைக்கமர்த்தப் பட்டிருந்தனர். ஒன்றிணைக்கப்பட்ட சேவைகளுக்கான அமைச்சின் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது குறிப்பிட்ட அலுவலகர்கள் நிரந்தரப் பதவிகளுக்காக விலக்களிக்கப்படுகின்றனர். எனினும், அமைச்சினால் சம்பளம் வழங்கப்படும் ஒரு அலுவலகர் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கடமைகளின் பொருட்டு விலக்களிக்கப்பட்டு 2015 ஆம் வருடத்திலிருந்து அவ்வலுவலகரை அமைச்சிற்குப் பெறுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்ட சமயத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரின் தே.த.க 1352 ஆம் இலக்க மற்றும் 2016.05.23 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் மீண்டும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தயவுடன் தெரிவிக்கின்றேன். ஆயினும், இவ்வலுவலகரை மீண்டும் அமைச்சிற்கு விடுவிப்பதற்கான |

| | | | |
|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ஆ) | 2018 ஆம் வருடத்தில் அமைச்சின் பதவியணியினரின் பயிற்சியளித்தல் சம்பந்தமான சோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 2018 சனவரி 24 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை 02/2018 ஆம் இலக்கத்தின் பிரகாரம் இலங்கை அரச சேவைகளுக்கு அமர்த்தப்பட்ட பதவியணியினர் நாட்டின் அபிவிருத்தி சம்பந்தமாக செயற்திறன் மற்றும் பயன்பாடு உள்ளோராக இருப்பதற்கான தேவைப்பாடு வலியுறுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அரச நிறுவனங்களில் சேவையாற்றும் மனித வளங்களின் திட்டமிடப்பட்ட அபிவிருத்திகளின் தேவைகளைக் கருத்திற்கொண்டு பதவியணியினர் ஒருவருக்கு வருடத்திற்கு குறைந்தளவு 12 மணித்தியாலப் பயிற்சிகளை வழங்கும் விதத்தில் மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். இருந்த போதிலும், அமைச்சு அத்திட்டத்தை தயாரித்து அதன் பிரகாரம் பதவியணியினருக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பதவியணியினருக்கு பயிற்சியளிக்கும் வாய்ப்புக்களை வழங்குதல் வேண்டும். | பொது நிர்வாக சுற்றறிக்கை 02/2018 ஆம் இலக்கத்தின் படி 2018 ஆம் வருடம் சம்பந்தமாக மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படவில்லை என ஏற்றுக் கொள்கின்றேன். மேற்படி சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கேற்ப மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பதவியணியினரைப் பயிற்றுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ii) | 2018 ஆம் ஆண்டில் அமைச்சின் உள்ளபடியான பதவியணியினர் பயிற்சிகள் சம்பந்தமாகத் தெரிவு செய்யப்பட்ட சிரேஷ்ட மற்றும் கனிஸ்ட மட்ட அலுவலகர்கள் 10 பேரும் இரண்டாம் மட்ட அலுவலகர்கள் 36 பேரும் | அனைத்துப் பதவியணியினர் களுக்கும் பயிற்சி வழங்கும் வாய்ப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் | பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக பிரிவுத் தலைவரின் அங்கீகாரத்துடன் விடயத்திற்குப் பொறுப்பான 60 அலுவலகர்கள் மட்டுமே குறிப்பிட்ட பயிற்சித் திட்டங்களில் |

| | | |
|---|---|---|
| மற்றும் கீழ் மட்ட அலுவலகர்கள் 9 பேரும் மட்டுமே ஆகும். இதன் பிரகாரம் அமைச்சின் 107 அலுவலகர்களுக்கு (முழுப் பதவியணியினரில் நூற்றுக்கு 66 வீதம்) எவ்வித பயிற்சிகளும் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | பங்குபற்றியதுடன் ஏனைய அலுவலகர்களுக்கு 2019 ஆம் ஆண்டில் பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |